மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : *நிர்வாகத் தொகுதியில் 87 பேர்கள், போதனை பகுதியில் உள்ளவர்கள் ஆகியோர்களைச் சேர்த்துத்தான், 3,215 பேர்கள் இருக்கிறார்கள்.*

Agricultural Production in Kodaikanal

* 279. *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government in regard to the augmentation of agricultural production with the help of German Experts at Kodaikkanal; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : *(அ) & (இ) கோடைக்கானலில் ஜெர்மன் நிபுணர்கள் உதவியுடன் விவசாயத்தை மேலும் பெருக்குவதுபற்றி எந்தச் செயற்குறிப்பும் இல்லை. ஆயினும் நீலகிரியில் கிடைத்த அனுபவத்தையும், கண்டு பிடிப்பையும், கோடைக்கானலில் விவசாய அலுவலர்கள் பயன் படுத்துவார்கள்.*

திரு. என். எஸ். வி. சித்தன் : *ஜப்பான் நாட்டிலே மிகக் குறைந்த இடத்திலே அதிகமான விளைச்சல் பெற்றுக் கொண்டிருக் கிறார்கள். அந்த நாட்டு உதவியுடன் கோடைக்கானல் பகுதியிலும் சிறுசிறு நிலங்கள் இருப்பதால் அதிக உற்பத்தியைப் பெருக்க முயற்சி எடுக்கப்படுமா ?*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : *இந்தக் கேள்வி நீலகிரி ஜில்லாவில் ஜெர்மன் நாட்டு உதவியுடன் விவசாயத்தைப் பெருக்குவது சம்பந்தமானது. அங்கு நம்முடைய நாட்டு நிபுணர்களுக்குக் கிடைக்கிற அனுபவத்தைக் கொண்டு கோடைக்கானல் பகுதியிலும் அதிக அளவுக்கு உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிடலாம். உறுப்பினர், ஜப்பான் நாட்டு முறையைப்பற்றிக் கேட்கிறார். அதற்கு இது இடமில்லை.*

திரு. இல. பலராமன் : *நீலகிரியில் கண்ட அனுபவம் என்ன வென்று அறிவிப்பார்களா ?*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : *நீலகிரியில் யார் கண்ட அனுபவத்தை மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார் ? (சிரிப்பு) இங்கே ஜெர்மன் நாட்டு நிபுணர்கள் உருளைக்கிழங்கு, காய்கறி இவற்றை அபிவிருத்தி செய்வது, கோழிப்பண்ணை வளர்ச்சி, கால்நடை வளர்ச்சி ஆகியவற்றில் புதிய முறையில் சோதனை செய்து கொண்டிருக்கிறார்கள்.*